



# புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

- எனக்கென்று தனியாக ஒரு வாழ்க்கை கிடையாது. என் வாழ்க்கை, என்றோ அருட்தந்தை வேதாத்திரியின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அவரது அடிமை நான்... என்று சொல்லி, அதன்படி வாழ்ந்தவர் புலவர் தியாகராஜனார்.
- புலவர் அற்புதமாக அன்பு செலுத்தும் புண்ணிய ஆத்மா. மனிதகுலத்திற்குத் தியாகம் செய்வதற்காகவே அவதரித்தவர். அதனால்தானோ என்னவோ, அவருக்கு தியாகராஜன் என்று பெயரிட்டுள்ளனர். பெயருக்கு ஏற்றவாறே தியாகமாகவே வாழ்ந்தவர்.
- தியாகராஜன், தனது ஐந்து வயது வரை உடலிலே ஆடையின்றியே இருந்தாராம். துறவுக்கான விதை அப்போதே விதைக்கப்பட்டது.
- 


- புலவர் தியாகராஜனார் வாழ்க்கை வரலாறு முழுதும் “குருவுடன் வாழ்ந்தவர் என்ற தலைப்பில் 50 அத்யாயங்களில் 207 பக்கங்களில் மன்னார்குடி பானுகுமார் பதிவு செய்துள்ளார்கள். இதனை கோவை விஜயா பதிப்பகம் வெளியிட்டுள்ளது.
- புலவர் தியாகராஜனார் வாழ்க்கை வரலாற்றை (“குருவுடன் வாழ்ந்தவர்” ) இணைதளத்தில் www.banukumar.in என்ற முகவரியில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து படித்து இன்புறலாம்.
- குருவை நினைத்தே வாழ்ந்த புலவர் -வேதாத்திரி மகரிசி போலவே உருவத்திலும் பண்பிலும் மாறியதை நாம் அறிவோம். புலவரைப் பார்த்து - சுவாமிஜி என்று

ஏமாந்தவர்கள் பலர். அந்த அளவிற்கு தோற்றத்திலும் பண்பிலும் ஒற்றுமை.

- சுத்தானந்த பாரதி முதல் பல ஞானிகளையும், மகான்களையும், சான்றோர்களையும சந்தித்துப் பழகிய புலவர், இறுதியில் வேதாத்திரியே குரு என்றுணர்ந்தார்.
- நம்மோடு வாழ்ந்து - நாம் பார்த்து பழகி - இரசித்த - வாழ்த்திய வணங்கிய - நடமாடும் தெய்வமாய் உலா வந்த- குருவின் முதன்மைச் சீடர் புலவர் தியாகராஜனார் வாழ்வியல் சரிதை நூலான "குருவுடன் வாழ்ந்தவர்" - ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய ஞானக் கருவூலம்.
- ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கு தோத்தாப்புரியும் -
- விவேகானந்தருக்கு ஸ்ரீஇராமகிருஷ்ணரும் -
- சகோதரி நிவேதிதைக்கு சுவாமி விவேகானந்தரும்
- சித்பவானந்தருக்கு சுவாமி சிவானந்தரும்-
- விசிறி சாமியாருக்கு சுவாமி ராமதாசும் -
- சிதானந்தருக்கு ரிசிகேஸ் சுவாமி சிவானந்தரும்-
- வேதாத்திரிக்கு பாலகிருஷ்ண நாயக்கரும் குருவாய் வந்தது போல் - புலவர் தியாகராஜனாருக்கு வேதாத்திரி மகரிசி குருவாக வந்தார்.
- "குருவுடன் வாழ்ந்த புலவர் தியாகராஜனார் வாழ்க்கை" உலக நன்மைக்காகவே எழுந்தது. இவரது அருள் மொழிகள் குருவாய் வந்த இறைவனை நேருக்கு நேர் காணுமாறு செய்ய வல்லவை.




ஞானப்புருஷர் புலவர் தியாகராஜனார்.

- நேர உணர்வு மிக்கவர் புலவர் தியாகராஜனார்.
- அய்யா, தனது ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும் "ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!

வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!” என்ற பாட்டினை பாடி, தனது உரையை முடிப்பது வழக்கம். இதன் மூலம் அங்கிருக்கும் அன்பர்களுக்கும் மானுடத்திற்கும், அய்யா சொன்ன செய்தி, “ஆனந்தமாக இருங்கள்” என்பதேயாகும்.

- திருவாசகத்திலும் வேதாத்திரியத்திலும் உருகி உருகி திளைத்தவர் புலவர் தியாகராஜனார்.
- இளம் வயதில்–தியாகராஜனாருக்கு-- அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் தொண்டு செய்வது ஒரு சம்பிரதாயமாகவோ இயந்திரத்தனமாகவோ இல்லாமல் இருந்ததால் -- அது தன் குருவான வேதாத்திரி மகரிசிக்கு செய்யும் சேவையாக மாறியது.
- வேதாத்திரி மகாசமாதி அடையும் வரை முழு இதயத்தோடு- அவருக்கும் பின்பு- அவரது உலக சமுதாய சேவா சங்க அன்பர்களுக்கும்- முழு இதயத்தோடு தொண்டாற்றினார். அதன் பிறகு, அவரது குரு பக்தி, இரண்டு விதங்களில் வெளிப்பட்டது. ஒன்று வேதாத்திரி மகரிசியின் உருவத்தையே மனதில் நிறுத்தி வழிபடுவது. இரண்டாவது, ஆழியாறில் நடைபெறும் மனவளக்கலை அன்பர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எடுப்பது. அருட்தந்தை ஸ்தானத்தில் இருந்து பயிற்சி முடிந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது.
- 


- வேதாத்திரி மகரிசி மறைந்த பிறகு பொள்ளாச்சி சே வையிலிருந்து விடுபட்டு, ஆழியாறில் அமர்ந்து மறையும் வரை

சேவை செய்தார்கள்.

- புலவர் தியாகராஜனார் கி.பி.1932 முதல் 2011 ஆண்டு வரை 80 ஆண்டுகள் வாழ்ந்தார்.
- சேவைக்காக வாழ்ந்த துறவி புலவர் தியாகராஜனார்.
- "துறவறம் பூண்ட தூயவர் புலவர் தியாகராஜனார்.
- தனது குரு வேதாத்திரிக்கு சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் அணுக்கத்தொண்டராக இருந்துள்ளார்கள்.
- குருவுடன் வாழ்ந்தவர் புலவர் தியாகராஜனார்."
- "குருவின் மீது பிள்ளைத்தமிழ் பாடிய புலவர் தியாகராஜனார்."
- "சுத்தானந்த பாரதியாருடன் நெருங்கி உறவாடி பழகியவர் புலவர் தியாகராஜனார்.
- "பத்திரகிரியாரும் பட்டினத்தாரும் போல வேதாத்திரி மகரிசியும் புலவர் தியாகராஜனாரும் சென்னையில், தியாகராயநகர் திருமலைப்பிள்ளை ரோடில் உள்ள வால்மீகி தெருவில் அதாவது காமாராஜர் நினைவு இல்லத்திற்கு அருகில் வசித்து வந்துள்ளனர்.
- சற்குருவின் உள்உணர்வில் உயிரறிவாய் நிலைத்தவர் புலவர் தியாகராஜனார்.
- குழந்தைப் பண்பும் பெருந்தன்மையும் கொண்டவர் புலவர் தியாகராஜனார்.
- வாக்குத் தவறாத வள்ளல் புலவர் தியாகராஜனார்.
- சமநோக்கு சத்தியசீலர் புலவர் தியாகராஜனார்.
- ஆன்மீக கருத்துக்களுக்கு பொக்கிஷமாகவும், ஆழ்ந்த தத்துவ விளக்கங்களுக்கு களஞ்சியமாகவும் விளங்கும்- புலவரின் பெருமையானது-- ஞானக்கடலாகவும் உணர்வுமிக்க கலைஞராகவும் விளங்கியதும், குருவுடன் இணைந்து வாழந்தவர்…அவரோடு உயிரில் கலந்தவர்-- அணுக்கத் தொண்டராக இருந்தவர் என்பதே இத்தகைய பெறுதற்கரிய பேறு அவரக்குக் கிடைத்திருந்தது.

- புலவரிடம் ஆழ்ந்த ஞானமும், பரந்த அறிவும் இருந்தன. அதே நேரத்தில் அவரிடம் கர்வமில்லாத எளிமையும் இருந்தது. இத்தகைய ஞானமும் அறிவும் கொண்டிருப்பவர் எளிமையாக இருப்பது காண்பதற்கு அரிய காட்சியாகும்.
- கோபத்திலும் கடுமையாகப் பேசிப் பார்த்திருக்க முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் புலவர் குரலை உயர்த்திப் பேசியதில்லை. இது அவரது தனிச்சிறப்பான தன்மையை வெளிப்படுத்தியது.
- புலவரின் வாழ்க்கையின் முக்கியமான அம்சம் அவரது தூய- எளிய வாழ்க்கைதான். இயல்பான எளிமை , ஆழ்ந்த ஞானம், கருணை, புரிந்து கொள்ளும் சக்தி, இரக்கம் அனைத்தும் அவரது இதயத்தில் நிறைந்து இருந்தன.
- மற்றவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதை புலவர் தனது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தார். புலவரும் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார். புலவர் தன்னைச் சுற்றி உற்சாகத்தைப் பரப்பினார். மக்கள் கவலையை மறக்கும்படிச் செய்தார்.
- புலவரின் சமையலை மிகவும் விரும்பி ருசித்து சாப்பிடுவார் அருட்தந்தை. "உலக சமாதானப் பொங்கல்" என்று இதற்குப் பெயரும் வைத்தார்கள் மகரிசி. பிற்காலத்தில்- உமாவும் இத்தகைய சமையல்களைச் செய்து- மகரிசிக்கு வழங்குதுண்டு. அதை "புலவர் பொங்கல்" என்று அழைத்து மகிழ்ந்தார்கள்.
- சாந்தம் மற்றும் அமைதியுடன் இருப்பதும் முற்றிலும் கோபப்படாமல் இருப்பதும் அற்புதமான குணநலன்கள் புலவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது.



- எந்த ஒரு மனிதரிடத்திலும் புலவர் குறை காணமாட்டார். மக்களிடம் உள்ள நற்குணங்களையே புலவர்

போற்றிப் பாராட்டுவதை நான் கண்டிருக்கிறேன்.

- புலவர் ஒவ்வொரு விஷயத்திலும் ஆன்மீக அணுகுமுறையை நூறு சதவீதம் கடைப்பிடித்தார். அவர் பல ஆண்டுகள் தவமியற்றி, பிராத்தனை செய்து, தொண்டாற்றி இந்த இயல்பைப் பெற்றிருக்கிறார். இந்த இயல்பு அவர் பிறந்தது முதல் இரத்தத்தில் கலந்திருக்கிறது.
- தினசரி பணிகள் ஒவ்வொன்றுக்கும் நேரம் ஒதுக்கி அதன்படி செயல்படுவார். வாழ்க்கையில், ஆன்மீகத்துக்கு உள்ள முக்கியத்துவத்தைப் பறை சாற்றினார். அதை மீண்டும் மீண்டும் வலியறுத்தினார்.
- புலவரிடம் எதைக் கேட்டாலும் "குருவின் அருள்" என்றே பதில் வரும். வார்த்தைகளில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பார்.
- தனது எண்ணங்களிலும் செயல்களிலும் மிகவும் கவனமாக இருப்பார்.
- பிரம்மச்சரியத்தின் மகிமையை, மானுடத்திற்கு எடுத்துக் காட்டுகிறது நமது புலவரின் வாழ்க்கை.
- ஆக்கப் பூர்வமான விஷயங்களிலேயே புலவர் கவனம் செலுத்தினார். எதிர்மறையான விஷயங்களில் அவர் பார்வை சென்றதில்லை.
- புலவர் எதையும் திருந்தச் செய்வார். சொற்களை வெளியிடுவதில் கவனமாக இருப்பார்.
- கொங்கு நாட்டில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தின் பெரிய மணலி என்னும் சிற்றூரில்- ஜேடர்பாளையத்தில் நெசவுத் தொழில் செய்யும் தேவாங்கச் செட்டியார் இனத்தில்- கே..பி. கந்தசாமி சர்மா-பொன்னம்மா தம்பதியினருக்கு கடைசியாக -ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர் புலவர் தியாகராஜன்.
- தியாகராஜன் 1932 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாள் குமாரபாளையத்தில் பிறந்தார். (அப்போது அவரது குடும்பம் குமாரபாளையத்தில் வசித்து வந்தது)

- ஞானப்பரம்பரையில் வந்த புலவர் தியாகராஜனார் 1932 முதல் 2011 வரை இப்பூவுலகில் வாழ்ந்த ஜீவன்முக்தர்- எண்பது ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்திருந்து குரு சேவையை செய்து, தொண்டே தொழுகையாக வாழ்ந்த வள்ளல்.
- முப்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி நல்லாசிரியர் விருது பெற்றவர்.
- குருவுடன் பண்ணிரண்டு ஆண்டுகளுக்கு மேல் அணுக்கத் தொண்டராகவும், உலக சமுதாய சேவா சங்கத்தின் தொண்டராக, பேராசிரியராக நாற்பது ஆண்டுகளும் தொண்டாற்றி இன்பமுற்றவர்.




- சித்த மருத்துவத்தை கற்றுணர்ந்து, அதை மானுடத்தின் உடல் நலத்திற்காக பயன்படுத்தினார்கள்.
- அருட்தந்தையின் மறைவுக்குப் பிறகு. ஆறாண்டுகள் ஆழியாறிலே அமர்ந்து குருவின் தொண்டில் தன்னை இணைத்துக் கொண்ட தியாகசீலர்.
- குருவின் ஒவ்வொரு அசைவிலும கூடவே இருந்து, இணைந்து, உடலால், உயிரால், உணர்வால், உருவத்தால் குருவாகவே மாறி உலக சமுதாய சேவா சங்கத்தின் மூத்த பேராசிரியராகவும், பொள்ளாச்சி வேதலோக அன்புநிலைய அறக்கட்டளையின் தலைவராகவும் தொண்டாற்றியவர் புலவர்.
- புலவர் தியாராஜனார் அய்யாவின் வாழ்க்கை வரலாறு, குருவின் மூலமாக பரம்பொருளைக் காணற்குரிய பயிற்சியின் வரலாறு எனலாம். அவர்தம் வாழ்க்கை, இறைவனை நாம் நேருக்கு நேர் காணுமாறு செய்ய வல்லது.

- மனவளக்கலை அன்பர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? வேதாத்திரிய சீடர்கள், ஆசிரியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்று வாழ்ந்து காட்டிய முதன்மைச் சீடர்,
- அன்பு, அடக்கம், எளிமை, தூய்மை, நேர்மை, இனிமை, பணிவு, பேச்சாற்றல், இன்சொல் போன்ற பண்புகளின் உறைவிடமாக இலக்கணமாக வாழ்ந்தவர்.



- "குருவுடன் வாழ்ந்தவர்" புத்தகத்தில் புலவரின் வரலாற்றைப் பதிவு செய்த நூலாசிரியர் பானுகுமார்.....புலவரிடம் பல ஆண்டுகாக பழகி உயிர்கலப்பு பெற்றவர். தனது குடும்பத்தில் ஒருவராக பாவித்து புலவரிடம் அன்பு பாராட்டியவர். அவரது இல்லத்தில்-- புலவர் அடிக்கடி சென்று சத்தசங்க நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.
- " கொடிது கொடிது வறுமை கொடிது -அதனினும்கொடிது இளமையில் வறுமை" என்ற ஔவையார் பாடலுக்கு இணங்க, ஆசிரியர் பயிற்சி படித்து முடிக்கும்வரை வறுமையில் வாழ்ந்தார் தியாகராஜர்.
- தியாகராஜன் வீட்டின் கடைக்குட்டியாதலால், அம்மாவிடம் செல்லம் அதிகம். தாய் பொன்னம்மா குழந்தைகளுக் கெல்லாம் கூழ் கொடுப்பார். கடைக்குட்டிக்கு மட்டும் கூழ் குடிக்கக் கடித்துக் கொள்வதற்கு வெல்ல உருண்டை கொடுப்பார்கள்.
- சிறுவன் தியாகராஜனுக்கு கல்வி கற்பதிலே மிகவும் ஆர்வம் உண்டாகியது. தன்னுடைய மூத்தவர்கள் அதிகம் படிக்காவிட்டாலும் இவனுக்கு மட்டும் கல்வி கற்பதில் ஒரு ஈடுபாடு.

- சிறுவன் தியாகராஜன் தனது ஆரம்பக் கல்வியை வேப்பம்பட்டி புதூரில் படித்தான்.
- உயர்நிலைக் கல்வியை திருச்செங்கோடு பள்ளியில் படித்தான்.
- ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை சிறுவன் தியாகராஜன் எளச்சிப் பாளையத்திலிருந்து திருச்செங்கோட்டுக்கு நாள் சோறும் (சுமார் பத்து மைல்கள்) நடந்தே போய் படித்து வந்தான்.
- கல்வியில் முதல் மாலணவனாகவே தியாகராஜன் விளங்கினான். அக்காலத்தில் பெரும்பாலும் ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்கள் நடந்த சென்றே கல்வியைக் கற்று வந்தனர்.
- சிறுவன் படிப்பில் காட்டும் ஆர்வம், அவனது பணிவு, அடக்கம், எளிமை, ஏழ்மை ஆகியவை ஆசிரியர் கண்ணனின் மனதைக் கவர்ந்தது. எனவே தனது வீட்டிலேயே தியாகராஜனை தங்க வைத்து பள்ளி இறுதி வகுப்பு வரை படிக்க வைத்தார்.
- பள்ளிநேரம் தவிர மற்ற நேரங்களில் ஆசிரியர் விட்டில் உள்ள வேலைகளை அனைத்தையும் சிறுவன் தியாகராஜன் செய்து வந்தான்.
- எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குப் பணம் கட்ட வேண்டும். குடும்பத்தினர் சாப்பிடவே கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர். படிக்க வைத்த வீட்டிலும் கையை விரித்து விட்டனர். தாய்வழி உறவினரான திரு ராஜகோபால் செட்டியாரிடம் சென்று- அவர் காலில் விழுந்து “எனக்கு தேர்வுக் கட்டணம் செலுத்த வசதி இல்லை” என்று சொல்ல, அவரே தேர்வுக்குப் பணம் கட்டினார்.
- கிராம மக்களுக்கும், ஏழை மாணவர்களுக்கும் தொண்டு புரிந்தான் சிறுவன் தியாகராஜன். தினசரி- பெரும்பான்மையான நேரம் பிரார்த்தனை, தியானம், நூல்களை வாசித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டான்.
- பாலகன் தியாகராஜனின் தீவிரமான ஆன்மீகப் பயிற்சியினால், அற்புத மனிதருக்கு ஆன்மீக ஒளி பிறந்தது. அவர் இந்த

நிலையை அடைந்த நாளிலிருந்து அவரது லட்சியப் பணி தொடங்கியது.

- தான் பெற்ற இன்பத்தை எல்லோரும் அடைய வேண்டும் என்று விரும்பினார். பின்னாளில் சன்மார்க்க சங்கத்துக்கு தனது குருநாதரை வேதாத்திரி மகரிசியை மூன்று முறை அழைத்து வந்தார். சுத்தானந்த பாரதியர் போன்ற ஞானிகளையும் சாதுக்களையும் தான் பிறந்த ஊரில் இருக்கும் சன்மார்க்கச் சங்கத்திற்கு அழைத்து வந்து அவர்களது உபதேசங்களைக் கேட்டு அவ்வூர் மக்களைப் பயனடையச் செய்தார்.
- பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் வித்வான் படிப்பில் சேர்ந்து பயின்றார் புலவர்.
- வித்துவான் படிக்கும் போது விடுமுறை நாட்களில் கோவை சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளுக்கு "யோக நல்வாழ்வு வகுப்புகள்" எடுத்து பாடம் சொல்லிக் கொடுப்பதை தியாகராஜன் வழக்கமாகக் கொண்டிருந்தார்.
- வார விடுமுறை நாட்களில் தியாகராஜன், அக்கல்லூரி முதல்வர் வீட்டுக்குச் சென்று அவருக்கேற்ற பணிவிடைகளைச் செய்து வந்தான்.
- தனது லட்சியக் கனவான ஆசிரியர் பணியை, தான் படித்த பேரூர் சந்தலிங்க அடிகள் தமிழ்க கல்லூரியில் ஒரு வருடம் செய்தார்கள்.
- ஆசிரியர் பயிற்சி முடிந்ததும், தான் பிறந்த ஊரில் உள்ள மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். அந்த ஊரில் தந்தையார் நடத்திவந்த காப்பி கடையிலும் பணி புரிந்தார்.
- தனது கொள்கைப்படியே, ஆசிரியர் தொழிலை தெய்வமாகவும், அதே நேரத்தில் அக்கல்லூரி நிர்வாகிகளிடம் பணிவுடனும் அடக்கத்துடனும் நடந்து கொண்டார்கள்.

- தன் வீட்டிருகே இருக்கும் சன்மார்க்க சங்கத்தில் தங்கியிருக்கும் சன்மார்க்கிகளை காணச்செல்லும் சிறுவன் தியாகராஜன், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான்.
- தனது வயதொத்த பிள்ளைகளுடன் விடையாடப் போகாமல் சன்மார்க்கிகள் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பான். சன்மார்க்கிகளுக்கு உதவி செய்வதில் சிறுவனின் மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.
- தனது பருவ வயதில் தனித்திருந்து தவம் பரிந்தான். பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபாட்டான். தமது ஊருக்கு வரும் சன்மார்க்கிகள், சாதுக்கள் போன்ற சான்றோர்களை தனது வீட்டிற்கு அழைத்து வந்து அவர்களுக்குச் சேவை செய்து மகிழ்ந்தான்.
- சாதுக்களிடமிருந்தும் சன்மார்க்கிகளிடமிருந்தும் புலன்களை அடக்கப் பயிற்சி எடுத்துக் கொண்டான். அருகில் இருப்பவர்களுக்கு தொண்டு புரிந்தான். அவர்களிடம் அன்பும் கருணையும் கொண்டு பழகி வந்தான்.
- பேருரில் பணி புரிந்து கொண்டிருந்தபோது, அய்யாவுக்கு தமிழக அரசின் அரசுப் பள்ளியில் தமிழாசிரியர் பணி கிடைத்து.
- ராணிப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், 1961 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் பணிபுரிந்தார்.
- அய்யாவின் அருள்தாகம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு இருந்தது. சன்மார்க்க சங்கத்தில் திளைத்த புலவருக்கு, திருப்பராய்த்துறையில் இருக்கும் சுவாமி சித்பவானந்தரின் அந்தர்யோகத்தில் கலந்து கொள்வதையும் வழக்கமாக கொண்டார்.
- சித்பவானந்தரின் கீதை விளக்கமும், தாயுமானவர் பாடல்களுக்கான விளக்கமும், திருவாசக உரையும், அய்யாவைக் கவர்ந்த நூல்களாகும்.

- புலவர் தனது சொற்பொழிவுகளில் சித்பவானந்தரின் கருத்துக்களைச் சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

முக்தி அடையும்வரை சித்பவானந்தரின் திருவாசக உரையை படித்து மகிழ்ந்தார்.

- செங்கற்பட்டு செல்லும் புலவர்-- ஆசிரியர் பானுகுமார் இல்லத்தில் ஆண்டுக்கொரு முறை வந்து சில நாட்கள் தங்குவார்கள். இங்கிருந்து மறைமலைநகர், சைதாப்பேட்டை, மயிலாப்பூர், கூடுவாஞ்சேரி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள மன்றங்களில் அருட்தொண்டாற்றிவிட்டு, அழியார் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

- புலவர் தியாகராஜருடைய துறவறம் அப்பழுக்கற்றது. “விடுமின் முற்றவும்” என்ற நம்மாழ்வார் வாக்குப்படி முதலில் எண்ணத்தால் துறவியானார். பின்பு மனதால், செயலால் துறவறத்தைக் கடைப்பிடித்தார்.



- ராணிப்பேட்டையிலிருந்து சென்னை சென்ற புலவர். தைாப்பேட்டை மாதிரி மேல் நிலைப் பள்ளியில் 1966 ஆம் ஆண்டு முதல் பணி ஓய்வு பெறும் வரை, அதாவது 1990 ஆம் ஆண்டு வரை அங்கேயே தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்கள்.
- சைதைாப்பேட்டையில் பணிபுரிந்தபோதுதான், எம்.ஏ. பட்டம் பெற்றார்கள். அங்கிருந்த போதுதான் பல மகான்களையும் சான்றோர்களையும் அறிஞர்களையும் சந்தித்தார்கள்.
- திருவான்மியூர் ஈஸ்வரன் கோயிலுக்கு மாலை நேரங்களில் செல்வார். அங்கு அவரது நண்பர் காமாட்சிநாதனுடன் திருவருட்பா மற்றும் தேவாரப் பாடல்களை பாடுவார்கள்.

திருவருட்பாவுக்கும் தேவாரத்திற்கும் விளக்கங்கள் எழுதி சிறுசிறு புத்தகங்களாக வெளியிட்டுள்ளார்கள்.

- இரண்டு வருடங்கள், திருவான்மியூரில் உள்ள பாம்பன் சுவாமி திருக்கோயிலில் மாலை வேளைகளில் பூஜை செய்தும் வந்தார்கள். அய்யா அவர்கள் பாம்பன் சாமிகள் மீது அளவு கடந்த பற்றும் பாசமும் வைத்திருந்தார்கள்.
- சுத்தானந்த பாரதியார் போன்ற மகான்களுடன் ஆத்மார்த்த தொடர்பு ஏற்பட்டது சென்னையில்தான்.
- சைதாப்பேட்டையில் பணிபுரிந்தபோதுதான் தன்னுடைய குருநாதரைக் கண்டு அவருடன் ஐக்கியமானார்கள். குருவின் மூலமாக பல சான்றோர்களையும் அறிஞர் பெருமக்களையும் சந்திக்கும் வாய்ப்பு பெற்றார்கள்.
- மாதாமாதம், தனது ஆசிரியர் சம்பளம் வாங்கியவுடன், சுத்தானந்தரைச் சந்தித்து ஒரு பகுதி தொகையை காணிக்கையாக வழங்கி மகிழ்ந்தார். சுத்தானந்த பாரதியின் பல நூல்களுக்கு அணிந்துரை வழங்கி சிறப்புப் பெற்றார்.
- பின்னாளில், வேதாத்திரி மகரிசியிடம் இணைந்தபோதும் சுத்தானந்தருடன் அய்யா தொடர்பு கொண்டிருந்தார். இவர் மூலமாக மகரிசி அவர்கள் அளித்து வந்த துரியாதீத பயிற்சியைப் பெற்று பயனடைந்தவர் சுத்தானந்த பாரதி. மேலும் மகரிசியின் உடற்பயிற்சியினையும் கற்றுக் கொண்டு, அதில் வரும் மகராசனம் சிறப்பு பற்றி பல கூட்டங்களில் பேசி மகிழ்ந்தார்.
- புலவர் தியாகராஜனார் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பவர்கள், குருவின் அவசியத்தையும், கடவுள் ஒருவரே உண்மைப் பொருள் மற்ற அனைத்தும் மாயை, பொய்ப்பொருள் என்பதை உணராமற் போகார்.
- புலவர் மீது சுத்தானந்த பாரதியார் அளவு கடந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். “புலவர் மணி, என்றே அவரை

அழைப்பார்கள். வெளியூரில் இருந்தாலும், அடிக்கடி புலவரிடம் கடிதம் மூலமும் தொடர்பு கொண்டிருந்தார்.



- புலவரின் ஆன்மீக நண்பர்களில் "திருக்கோயில்" என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. முருகவேள் அவர்கள் வேதாத்திரி மகரிசியின் நிகழ்ச்சி ஒன்றுக்குப் புலவரை அழைத்துச் சென்றார்.

அங்குதான் வேதாத்திரியின் உரையைக் கேட்டு உருகினார் புலவர். மகரிசியின் பார்வை வீச்சும் அவரது சொல்லும் காந்தம் ஊசியைக் கவர்ந்திழுப்பது போல புலவரைக் கவர்ந்து ஈர்த்தன. தான் தேடிக் கொண்டிருந்த குருவை சிக்கெனப் பிடித்துக் கொண்டார்.

- சென்னை தியாகராயநகரில் வால்மீகி தெருவில் வேதாத்திரி மகரிசி அவர்கள் தங்கியிருந்தார்கள். அவரிடம் சென்று, குண்டலினி யோகத்தை முறைப்படி கற்றுக் கொண்டார். புலவரின் அன்பில் திளைத்த மகரிசி, அவரை தன்னுடைய அணுக்கத் தொண்டராக அமர்த்திக் கொண்டார்.
- சென்னை தியாகராய நகரில் வாலிமீகி தெருவில் மகரிசி தங்கியிருந்தார்கள். புலவரும் மகரசியும் பக்கத்து பக்த்து அறைகளில் தங்கியிருந்தார்கள். பட்டினத்தாரும் - பத்திரகிரியாரும் போல் அருகருகே வசித்து வந்தனர்.
- மகரிசிக்குப் புலவர்தான் சமையல்காரர். பிரம்மச்சாரியின் சமையல் எப்படி இருக்கும்? இவரது சமையல் நூதனமானது. இவரது சமையல் ஆன்மீகமானது. அரிசி, பருப்பு, உப்பு, காய்கள், கடுகு, காரம் என்று தன்னிடம் உள்ள அத்தனையும் ஒன்றாகப் போட்டு வேக வைப்பார். அனைத்தும் வெந்ததும், ஒரு கிண்டு கிண்டி இறக்கி வைத்து விடுவார்.

- புலவர் அய்யா ஓய்வு பெற்ற பின்னரே நல்லாசிரியர் விருது அப்போதைய முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டது. இவருக்கு விருது வழங்கியதை நாளிதழ்கள் செய்தி வெளியிட்டு பாராட்டின.
- நல்லாசிரியர் விருது மட்டும் அய்யாவைத் தேடி வரவில்லை. பல விருதுகள் அய்யாவைத் தேடி வந்தன. திருவாடுதுறை ஆதினம் "சித்தாந்த இரத்தினம் " என்ற பட்டத்தையும், சுத்தானந்தப் பாரதியார் "புலவர் மணி" என்ற பட்டத்தையும், மாணவர் மன்றம் "ஆசிரியர் மணி" என்ற பட்டத்தையும் அய்யாவுக்கு வழங்கியது.
- புலவரின் சேவை மனப்பான்மையானது அவரை மருத்துவத் துறை நோக்கி ஈர்த்தது. எங்கே அவரது சேவை தேவையேன்ற ஈர்ப்பு இழுத்ததோ அங்கே அவர் சென்றார்.
- புழல் ரெட்டை எரி திரு.டி. கன்னியப்பன், அருப்புக்கோட்டை மருத்துவ மேதை சுந்தர மகாலிங்கம், வில்வனூர் வைத்தியர் மாணிக்க சுவாமிகள், நாமகிரிப்பேட்டை டாக்டர் கே. பெரியசாமி, அரக்கோணம் திருமதி கஜலெட்சமி ஆகியோரிடம் சித்த வைத்திய முறைகளைக் கற்றுத் தேர்ந்தார்கள்.
- புலவரின் மணிமண்டபம் அமைய கர்த்தாவாக இருந்தவர்கள் வேதலோக அன்பு நிலைய செயலாளர் திருப்பூர் முரளிதரன், தற்போதைய தலைவர் மாரியம்மாள், செங்கற்பட்டு அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், பொருள் உதவி செய்த சென்னை சில்க்ஸ் திருப்பூர் ஆறுமுகம், போத்தீஸ் நிறுவனம், ராமராஜ் காட்டன் போன்றவர்கள் நன்றிக்குரியவர்களே.
- புலவரது விருப்பப்படி- அவரது மண்ணில்- அவரது நிலத்தில்- அறிவுத்திருக்கோயில் அமையக் காரணமாக இருந்தவர் பேராசிரியர் உழவன் தங்கவேல் அவர்கள் நன்றிக்கு உரியவரே.
- தான் கற்றுத் தேர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி, மருந்துகள் தயாரித்து மானுடத்திற்கு நல்க முடிவு செய்தார்கள்.

இதற்காக, தனது சகோதரர் மகனான திரு இராமலிங்கம் மற்றும் அவரது துணைவியார் திருமதி ரேணுகா அம்மையாரைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களுக்குத் தான் கற்ற மருத்துவ முறைகளைக் கற்றுக் கொடுத்தார்கள்.

- சுத்தானந்த பாரதியார், மாலை நேரங்களில் புலவர் பணியாற்றிய சைதாப்பேட்டை பள்ளிக்கூடத்திற்கு வந்து, தமது காரில் பல கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது பிறந்த ஊரான சிவகங்கைக்கும் பலமுறை அழைத்துச் சென்றுள்ளார்.
- தான் கற்ற சித்த மருத்துவத்தில் பதினாறு வகையான மருந்துகளை தயாரிக்க ஏற்பாடு செய்தார்கள். பற்பொடி, ஆஸ்துமா சூரணம், சுகர் சூரணம், இதய நோய் சூரணம், செரிமான சூரணம், சுக சூரணம், வயிற்று வலி மாத்திரை, சளி இருமல் கப மாத்திரை, சுர மாத்திரை, பேதி மாத்திரை, கூந்தல் தைலம், மூட்டுவலி தைலம், குளிர்ச்சி தைலம், சத்து லேகியம், இணை களிம்பு மற்றும் சுக பாம்.
- புலவரை சந்திக்கும் அன்பர்கள், தங்கள் நோய்களைக் கூறி அதற்குரிய சித்த மருத்துகளை வாங்கிப் பயனடைந்தார்கள்.
- தன் வாழ்நாள் முழுவதும் சுத்தானந்த பாரதியாரின் நூல்களை விலைக் கொடுத்து வாங்கித் தன்னிடம் அன்பு பாராட்டும் அன்பர்களுக்கு பரிசாகக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார் நமது புலவர்.
- ஆண்டுக்கு ஒரு முறை- அருட்தந்தை- ரிஷிகேஷில் ஏழு நாட்கள் பயிற்சி நடத்துவார்கள். அந்த வருடம், புலவரும் அருட்தந்தையுடன் சென்று காசி, அலகாபாத், ரிஷிகேஷ் போன்ற இடங்களைப் பார்க்க ஆசைப்பட்டார். ஆனால், சூழ்நிலை காரணமாக மகரிசி மட்டும் முன்னதாக டெல்லி சென்றுவிடுகிறார்.
- ஒரு வாரம் கழித்து- புலவரும் திரு. கண்ணன்மணி என்பவரும் டெல்லிக்குப் புகைவண்டியில் பயணிக்கிறார்கள். முதன்

முறையாக தமிழகத்தை விட்டு நெடுந்தொலைவு பயணத்தை, புலவர் மிகவும் இரசித்தார்கள். ஆனால் தலைநகரான டெல்லியை நெருங்க நெருங்க இருவருக்கும் திடீரென்று அச்சம் வருகிறது.

- தங்களுக்கு டில்லி புதுசு. குழப்பத்துடன் டில்லி புகைவண்டி நிலையத்தை அடைகின்றனர். ஆனால், அங்கு இவர்களை வரவேற்க அருட்தந்தை, தனது அன்பர்களுடன் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இருவருக்கும் வியப்பு. மறுபக்கம் மகிழ்ச்சி. இதை- தன் வாழ்நாள் முழுவதும் அன்பர்களிடம் சொல்லி மகிழ்வது புலவரின் வழக்கம்.
- புலவரை- சாதாரண அன்பர் என்று கருதிவிடாதீர்கள். இவரிடம்- பல ஆண்டுகள் பிச்சை எடுத்து சாப்பிட்டவன் நான். ஆம். எனக்கு பல ஆண்டுகள் உணவு படைத்து வழங்கியவர் தியாகராஜன்" என்று- புலவலருக்கு தன் நன்றிக் கடனை-- அன்பர்களில் முன்னிலையில் சொல்லி வருவார் அருட்தந்தை.
- மகரிசியும் புலவரும் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலேதான் வள்ளுவர் கோட்டம் அமைந்திருந்தது. அப்போதுதான் திறக்கப்பட்டதால் அங்கு அவ்வப்போது பேரறிஞர்களும், தமிழ் சான்றோர்களும் வந்து உரையாடிக் கொண்டிருந்தனர். மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று உரைகளைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர்.
- "தியாகராஜா! வள்ளுவர் கோட்டத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று வாயேன்" என்று அருட்தந்தை புலவரிடம் சொன்னார்கள். "வேண்டாம் சாமி, இங்கு இருப்பதிலேயே எனக்கு ஆனந்தமாக இருக்கிறது. இங்கேயே இருந்து என் கடமையைச் செய்வதில் மகிழ்ச்சியாக உள்ளது" என்று புலவர் சொன்னார்கள். புலவரின் பதிலைக் கேட்டு- அருட்தந்தை ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். அப்படி ஒரு குருபக்தியும் குரு கைங்கர்யமும் புலவருக்குக் கிடைத்தது.

- <u>தனது பள்ளி இறுதி தேர்வுக்கு உதவி செய்த சேலம் ராஜகோபால் செட்டியார், மிகப் பெரிய அளவில் வியாபாரத்தை செய்து வந்தார்கள். இயற்கை விதியின்படி, செல்வந்தாரான திரு ராஜகோபால் செட்டியார் வியாபாரத்தில் நட்டமடைந்து வறுமையுற்றார்கள்.</u>
- <u>இதை அறிந்த புலவர் தனது குருநாதர் வேதாத்திரி மகரிசியை அழைத்துக் கொண்டு சேலத்திலுள்ள திரு ராஜகோபால் செட்டியார் வீட்டில், தன ஆகர்ஷ்ண சங்கற்பம் செய்தார்கள். மகான்களின் வருகையால் திரு ராஜகோபால் செட்டியாரின் வறுமை விரைவில் நீங்கிற்று.</u>
- <u>புலவரால் மகரிசியின் அன்பைப் பெற்று தன் வறுமையைப் போக்கிய சேலம் ராஜகோபால் செட்டியார் வழங்கிய இடத்தில்தான்-- இன்று சேலம் மண்டல அலுவலகமும் அறிவுத் திருக்கோயிலும் அமைந்துள்ளன.</u>
- <u>அய்யா அவர்களுக்கு, ஆசிரியப்பணி புரிந்ததற்கான ஓய்வூதியம் கடைசி வரை வந்து கொண்டிருந்தது. உறவினர்கள், மிகவும் ஏழமையானவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துதல், ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்காக உதவுதல், ஆதரவற்ற சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அவ்வபோது பொருள் உதவி செய்தல், தன்னை ஆதரித்த அந்தக் கால அன்பர்களுக்கு உதவி செய்தல் போன்ற பணிகளைச் சத்தம் இல்லாமல் செய்து வந்தார்கள்.</u>
- ஆழியாறில் இருந்தபோது- மணிமண்டபத்தில் ஐந்து வேளையும் தவம் நடத்துவார்கள். பயிற்சி பெறும் அன்பர்களுக்கு வகுப்பு எடுப்பார்கள். பயிற்சி முடித்தவர்களுக்கு மகரிசியின் இடத்திலிருந்து சான்றிதழ்கள் வழங்கி மகிழ்வார்கள்.
- சுவாமிஜியைப் போல் தோற்றமுள்ள அய்யாவை ஆழியார் வரும் பழைய அன்பர்களும் புதிய அன்பர்களும் தரிசித்து மகிழ்ந்தார்கள். மகரிசியைப் பார்க்காதவர்களுக்கு இவரது

காட்சி தெய்வீகமாக இருந்தது. மகரசியைப் பார்த்தவர்களுக்கு மீண்டும் அருள்தந்தையைப் பார்ப்பது போன்ற உணர்வு.

- முக்தி அடைவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கூட, ஆழியாறில் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி இன்பமுற்றவர் புலவர் தியாராஜனார்.
- அறிவாற்றல் மிகுந்த ஞானியர், தங்களை முழுமையாகச் சமுதாயத்திற்கே அர்ப்பணித்துக் கொண்டு, சமுதாயத்தை நல்வழி நடத்துவதையே தொண்டாகக் கொள்வார்கள். இந்த வகையில் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இச்சமுதாயத்திற்கே அர்ப்பணித்தவர் புலவர் அய்யா அவர்களாவார்கள்.
- மக்களின் ஆன்மீகப் பசியைத் தீர்க்கும் வள்ளலாகவும், அவர்களை அருள் வழியில் கொண்டு சென்ற அருளாளராகவும் வாழ்ந்தவர் நமது புலவராவார்.
- ஆசிரியப் பணி மூலம் நல் மாணாக்கர்களை உருவாக்கினார்கள். குருவிடம் கற்ற உபதேசங்களை எல்லாம், தமிழகம் முழுவதும் சென்று பரப்பினார்கள். குருவிற்குப் பிறகு அவரது இடத்திலேயே இருந்து ஆழியாறில் அருட்தொண்டாற்றினார்கள்.
- எளிமை, தூய்மை, சுயநலமற்ற தொண்டு, கடின உழைப்பு, இவற்றின் மொத்த வடிவமாக புலவர் அறநெறி வழுவாது வாழ்ந்திருந்தார் என்பதை அனைவரும் அறிவோம்.
- இறையருளையும் குருவருளையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு உழைத்தவரும் சீரிய பண்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றவரும் அருட்தந்தையின் முதன்மைச் சீடராகத் திகழ்ந்தவருமான புலவர் தியாகராஜன் அவர்களின் பெருமைக்கு காரணம்--- அவரின் தன்னிகரற்ற தொண்டுதானே!
- அருள் அன்னை லோகாம்பாள் மன்ற அன்பர்களுக்கு வைத்திருந்த பெயர் “சங்கத்துப் பிள்ளைகள்.” அவர்களில்

புலவரை மூத்தப் பிள்ளையாகப் பாவித்து அவரிடம் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தார்கள்.

- அருள் அன்னை நோய்வாய்ப்பட்டிருந்தபோது அடிக்கடி கூடுவாஞ்சேரி சென்று அன்னையின் உடல் நலம் குறித்து அவரிடம் உரையாடி வருவது புலவரின் வழக்கம்.
- 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் நாள் புலவர் அவர்கள் அருள்தந்தையின் இல்லம் சென்று, அன்னை அருகில் அமர்ந்த சிறிது நேரத்திலேயே, அன்னையார் அவர்கள் உயிர் நீத்தது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது.
- “நலம் எண்ணி, நலம் சொல்லி, நலமே செய்கின்ற நடமாடும் தெய்வங்களாகிய உங்கள் அனைவரையும் தொண்டே தொழுகையாக வாழ்ந்து வரும்  பேராசிரியப் பெருமக்களையும் மனமாற வணங்குகிறேன் என்ற உடன்பாடு வார்த்தைகளைச் சொல்லிதான் தனது சொற்பொழிவினைத் தொடங்குவது புலவரின் வழக்கம்.
- புலவர் மனிதர்களைப் பற்றிப் பேசினாலும் சரி… நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசினாலும் சரி… அதிலிருந்து கருத்துக்களைச் சொல்வார்கள்.  மனிதர்களைப் பற்றி விமர்சனம் செய்யாமல், கருத்துக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள். பலவிதமான செய்திகளிலிருந்து அவற்றில் ஊடாடி இருக்கக்கூடிய கருத்து என்ன என்பது தெளிந்த உள்ளத்திற்குப் புரியும்படி விளக்குவார்கள்.
- புலவரின் தத்துவஞானம் எவ்வளவு ஆழமானது என்பது அருட்தந்தைக்குத் தெரியும். புரியும். அவரின் சொற்பொழிவை, அருட்தந்தையே ஆழ்ந்து கேட்டு மகிழ்வார்கள்.  பாமரரும் புரிந்து கொண்டு பின்பற்றும் வகையில், அவர் தத்துவங்களை எளிய முறையில் நல்ல கதைகள் மூலம் விளக்கியுரைத்தார்.
- குறிப்பிட்ட நேரத்தில், தனது உபதேசத்தை முடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.  காலத்தையும் பொன்போல் போற்றினார்.  விஷயத்தை மேற்கோப்பாகச் சொல்லாமல்,

அவசியமற்றதைப் பற்றிக் கவலைப்படாமல் மையக் கருத்தைத் தெளிவாக எளிமையாக விளக்குவார்.


- புலவரின் உபதேசங்களில் பெரும்பாலானவை, நடைமுறை வாழ்க்கையிலும் யோக சாதனையிலும் பின்பற்றுவதற்கான அறிவுரைகளாக இருக்கும். அருள்தந்தையின் கருத்துக்களுக்கு மாறாமல், திருவள்ளுவரையும், தாயுமானவரையும், மாணிக்கவாசகரையும் துணைக்கு வைத்துக் கொள்வார். அவரது உபதேசங்களுக்கு சொற்களுக்கு மகத்தான சக்தி இருந்தது.
- திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், ஆழ்வார்கள். நாயன்மார்கள், வள்ளலார், வேதாத்திரி மகரிசி போன்ற பெரியோர்களின் எண்ணங்களை எளிமைப்படுத்தி அவற்றை வாழ்வியல் நெறியாக்கித் தன் உபதேசங்களில் கலந்து தந்தார் புலவர்.
- “கடைவிரித்தேன் கொள்வாரில்லை” என வருந்திய வள்ளலாரின் கனவு இன்று வேதாத்திரியத்தின் மூலம்- புலவரின் சொற்பொழிவுகளாக மலர்ந்தன.
- மனிதன் தன் உள்ளத்திலுள்ள அழுக்கெனும் குப்பைகளை நீக்க வேண்டும் என்றும், “தானமும் தியானமும் உங்களை உயர்த்தும்” “பணத்திற்காக அலைந்து உயர்ந்த பண்புகளை இழக்காதிர்கள்,” என்றும், “ஒற்றுமையும் உலக சமாதானமும் வேண்டும்” என்றும் “அச்சம் தவிர் ஆண்மை கொள்” போன்ற உயர்ந்த நோக்கங்களை- வாழ்வின் இலட்சியமாகக் கொள்வதால்- மனித வாழ்க்கை உயர்வடையும் என்பார் புலவர்.
- பேரின்ப வாழ்வை அனுபவிக்க வேண்டிய மனித இனம், ஏன் துன்பம், வறுமை, நோய், சிக்கல்கள், பிணக்குகள், பகை, போர் ஆகியவற்றால் துன்புறுகின்றது என்பதை ஆராய்வதும், அதன் காரணம் கண்டு அவற்றைத் திட்டமிட்ட முறையில் போக்கி, மனிதவளத்தைச் சீரமைப்பதுமே- மனவளக்கலையின் நோக்கம்

என்று ஆணித்தரமாகத் தனது சொற்பொழிவுகளில் வலியுறுத்திக் கூறுவார்.

- பக்தி, ஞானம், ஜபம், யோகம், தியானம் என்பனவற்றை தெளிவுபடுத்தி எல்லோருக்கும் புரியும் வண்ணம், மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் புலவராவார்.
- அந்தக் காலத்தில்- புலவர் -தானே கடிதங்களை எழுதுவார். தமக்கு வருகின்ற கடிதங்களுக்கு அவரே பதிலும் எழுதுவார்.
- புலவர் கடித்தை எழுதும் போது- முதலில் "வாழ்க வளமுடன்" "சுத்த சக்தி" எல்லோரும் வாழ்க"....என்று எழுதிய பிறகே தொடங்குவார். சில கடிதங்களில்..."இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க!" அன்பே நிறைக! அருளே பொலிக!" என்று எழுதிய பிறகே தொடங்குவார்.
- புலவர் சில கடிதங்களில் "நன்றாற்றி மகிழும் திருவருள்மிகக் பெருந்தகையீர்....."தொண்டாற்றி இன்பமுறும் பெருந்தகையீர்.... என்றும் தொடங்குவார். "குருவருளாலும் திருவருளாலும் இகபர நலங்கள் யாவும் பெற்று வாழ்க வளமுடன்" ....என்று கடித்தை முடிப்பார்கள். சில கடிதங்களில் "தங்களுக்கு எல்லாம் செயல்கூடும்"....என்றும் கடித்ததை நிறைவு செய்வது அய்யாவின் வழக்கம்.
- தனது சொற்பொழிவுகளில் சில பொன்மொழிகளை அடிக்கடி பிரயோகிப்பார் புலவர். "மனிதவாழ்வு, புனித வாழ்வாக, புண்ணிய வாழ்வாக, பூரண வாழ்வாக அமைய வேண்டும்"...ஒன்றைப் பிடி, உறுதிப் பிடி, மெய்ப்பிடி, கடைப்பிடி"..... என்ற மொழிகளில் புலவரின்உள்ளத்தின் அன்பை நாம் காணலாம்.
- சிறந்தவொரு எளிமையான மார்க்கம் குரு பக்தி. ஒப்பற்ற குருபக்தி கொண்டவர்தான் நமது புலவர் தியாகராஜனார். தனது எண்ணம், சொல், செயல் எல்லாவற்றையும் குருவுக்கே அர்ப்பணித்தவர். எந்நேரமும் குருவின் நினைவிலேயே

வாழ்ந்தவர். ஆம்! அருட்தந்தை வேதாத்திரியின் முதன்மைச் சீடராய் வாழ்ந்து காட்டியவர் புலவர்.

- மகாசாமாதிக்கு முந்திய நாளான 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் நாள் அய்யா பேசும் நிலையில் காணப்பட்டார். தன்னைக் கவனித்து வந்த அ.நி.காவிரிமணியத்திடம் முதல் நாள் இரவு பத்து மணிக்கு, அய்யா கடைசியாகப் பேசினார்கள். "அய்யா ஏதாவது வேண்டுமா? என்று அன்பர் கேட்கிறார். "ஒன்றும் வேண்டாம். எல்லாவற்றையம் நான் பார்த்துக்கிறேன். நீங்கள் போய் தூங்குங்கள்." இதுதான் புலவர் கடைசியாக சொன்ன சொற்கள்.
- அய்யா முக்தி அடையும் முதல் நாள் இரவு, பாலும் தேனும்தான் கடைசியாக அருந்தினார்கள்.
- டிசம்பர் 30 ஆம் தேதி (2011) காலை நான்கு மணிக்கு சிறுநீர் கழிக்கச் சென்றவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது. முற்றிலும் நினைவு இழந்தார். மருத்துவர்கள் செய்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. நாடித் துடிப்பும் குறையலாயிற்று.
- டிசம்பர் 30 ஆம் நாள் (2011) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு புலவர் தியாகராஜன் தனது குருவான வேதாத்திரியின் திருவடிகளை அடைந்தார். அவரது முகம் எப்பொழுதும் போல் அமைதியாகவே இருந்தது. தெய்வீகமான புன்முறுவலும் அசாதாரணமான அமைதியும் அவரது முகத்தில் தவழ்ந்தன.



- புலவரின் பூதஉடல் அன்பர்களின் தரிசனத்திற்காக ஆழியார்-வேதலோக அன்பு நிலையத்தில் வைக்கப்பட்டது. பத்திரிக்கைகள் மூலமாக விபரம் அறிந்த பக்தர்களும் அன்பர்களும் அறங்காவர்களும் பேராசிரியர்களும் சாதுக்களும் திரண்டு வரலாயினர். "வாழ்க வையகம் வாழ்க வளமுடன்"

என்ற மந்திரத்தை உச்சரித்து தியானத்தில் ஆழ்ந்தனர் அன்பர்கள்.

- முன்பே- புலவரின் விருப்பப்படி- அவர் பிறந்த மண்ணில் அவருக்குச் சொந்தமான பதினைந்து செண்ட் இடத்தில் சமாதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மறுநாள் பிற்பகல் 31.12.2011 சனிக்கிழமை புலவரின் உடல் தேவாங்கபுரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.
- நாற்பது ஆண்டுகாலம் குருவின் நிழலாய், அவரது ஒவ்வொரு அசைவிலும் கூடவே இருந்து, இணைந்து உடலால் உயிரால் உணர்வால், உருவத்தால், குருவாகவே மாறி உலக சமுதாய சேவா சங்கத்தின் மூத்த பேராசிரியராகவும், பொள்ளாச்சி வேதலோக அன்புநிலைய அறக்கட்டளையின் தலைவராகவும். லட்சக்கணக்கான அன்பர்களுக்கு மனவளக்கலை பயிற்சி அளித்த புலவர்- தமது சொந்த பூமியில் அமர்ந்துவிட்டார். சமாதி ஆனாலும் மகான்களுக்கு மரணமில்லை. அவர் இறைநிலையோடு பயணம் சென்று விட்டாலும் அவர் சென்ற ஆன்மீகப் பயணம் தொடர்ந்து கொண்டே இருகிறது.
- புலவர் தியாகரஜனாரின் மணிமண்டம் இருக்குமிடம் 1-575 தேவாங்கபுரம், , பெரியமணலி 637410, நாமக்கல் மாவட்டம், மணிமண்டபத்தை பராமரித்து வருபவர் அருள்நிதி மணிகண்டன் (அலைபேசி 9965982376)
- புலவரின் மணிமண்டபத்தில் அவரது சமாதியில் நாள்தோறும் தியானம் நடைபெற்று வருகிறது. அவரது பிறந்த நாளிலும் மறைந்த நாளிலும் பெரிய அளவில் விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு அம்மாவாசை அன்றும் பஞ்சபூத தவம் நடத்தி அன்னதானமும் வழங்கி வருகிறார்கள்.
- தம் வாழ்நாள் முழுவதையும் தம் குருவின் சேவைக்காக உலக மக்களுக்க்காகவே அர்ப்பணித்து, உலகநலத் தொண்டராக வாழ்ந்தவர் நமது புலவர்.

- நம்மிடைய வாழ்ந்த சீடராக, ஞானியாக தர்மத்தின் தலைவராக, யோகியாக, சித்தராக, தனி மனித வாழ்வியல், உயிர் பண்பியல் அனைத்திலும் சிறந்தோங்கி மக்களுக்காக மக்களிடையே மக்களில் ஒருவராக வாழ்ந்த நமது புலவர் “தோன்றிற் புகழோடு தோன்றுக.” என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நம்மிடையே தெய்வமாக வாழ்ந்து வருகிறார்கள்.

# துணைநின்ற நூல்கள்


1. “குருவுடன் வாழந்தவர்” – அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், கோவை விஜயா பதிப்பகம் வெளியீடு
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி.
3. எனது வாழ்க்கை விளக்கம், வேதாத்திரி மகரிசி.